

கழக இளைஞரணிச் செயலாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் எம்.எல். ரவி மற்றும் மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் வெ. ஹரிதாஸ் ஆகியோரின் இல்லத் திருமண விழாவில் கலந்து கொண்டு, மணமக்கள் ஆர்.அருள்பிரகாஷ் – கே.லோகநிலா ஆகியோரை வாழ்த்தினார். உடன் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, முன்னாள் அமைச்சர்கள் மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆவடி சா.மு.நாசர், அன்பில்மகேஷ் பொய்யாமொழி, தங்கம்தென்னரசு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ், மாதவரம் எஸ்.சுதர்சனம், திருத்தணி எஸ்.சந்திரன், டி.ஜெ.கோவிந்தராஜன் மற்றும் கே.பி. சங்கர், சி.எச்.சேகர், பி.ஜெ.மூர்த்தி, மு.பகலவன், பிரபுகஜேந்திரன், ஜி. பாஸ்கர் சுந்தரம், வே.அன்புவாணன், ஏ.கே.சுரேஷ், மு.கதிரவன், கே.வி. ஜி.உமாகேஸ்வரி, எஸ்.ரமேஷ், பி. வெங்கடாஜலபதி, பா.செ. குணசேகரன், கி.வே. ஆனந்தகுமார், எம். முரளிதரன், ஏ.ஆர்.டி. உதயசூரியன், வே.ஆனந்தகுமார், கே.வி.லோகேஷ் , மா.சீனிவாசன் உள்பட திமுக நிர்வாகிகள் உள்ளனர்.

### கே.ஏழுமலை தலைமை! மயிலை த. வேலு - கோ.சு.மணி முன்னிலை! தியாகராயர் நகர்

# 132வது வட்டச் செயலாளர் ந.மோ.முரளி இல்ல மணவிழா வரவேற்பு!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!

சென்னை, ஜுன் 21-

தியாகராயர் நகர் மேற்கு பகுதி 132 வது வட்டக் கழக செயலாளர் ந. மோ.முரளி இல்லத் திரு மண வரவேற்பு விழா 25.6.2026 வியாழக்கிழமை மாலை 6:00 மணியளவில் தியாகராயர் நகர், அபிபுல்லா சாலை, பசும்பொன் தேவர் மண்டபத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்புக்கு பகுதிச் செயலாளர் கே. ஏழுமலை தலைமை வகிக்கிறார்.

சென்னை தென்மேற்கு



மாவட்டச் செயலாளர் மயிலை த. வேலு, கோ. சு. மணி,எஸ்.மோகன், நந்தனம், கி. மதி, எஸ். முரளி, ராஜா அன்பழகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கோடம்பாக்கம் மு.சத்தியா வரவேற்புரையாற்றுகிறார்.

இம்மணவிழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை வழங்குகிறார்.

இம்மணவிழா வரவேற்பில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ. ராசா எம்.பி., முன்னாள் அமைச்சர்கள் மா. சுப்ரமணியம், பி.கே. சேகர்பாபு, கோவி. செழியன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலையச் செயலாளர் பூச்சி எஸ்.முருகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பிக்கின்ற னர்.

இ. கார்த்தி, டி. ராஜசேகரன் சுந்தர் பிளிப் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### மதுரை அவனியாபுரம் பட்டியலின

# அருந்ததியர் பட்டதாரி இளைஞர் படுகொலை! சாதிவெறி கூலிப்படையினரின் கொடூரச்செயல்!

## ஆதித்தமிழர் பேரவை வன்மையாகக் கண்டிக்கிறது!

சென்னை, ஜுன் 21-

ஜல்லிக்கட்டுக்கு புகழ் பெற்றது அவனியாபுரம் மட்டுமல்ல, சாதி வெறிக்கும் புகழ் பெற்றது என நிரூபிக்கின்ற வகையில் ஒரு சாதி வெறிப் படுகொலை சம்பவத்தை கண்டுள்ளது அவனியாபுரம்.

இப்பகுதியில் வசிக்கும் தங்களை ஆதிக்க சாதியாக அடையாளப்படுத்திக் கொள்ளும் பெரும்பான்மை இளைஞர்கள் தங்கள் கைகளில் மஞ்சள் சிவப்பு கயிறு கட்டிக் கொண்டு அலைவதை சர்வ சாதாரணமாக காணலாம் அதே கலரில் ஒரு இன்று கட்சி ஆள்வதையும் அவர்கள் பெருமையாக கருதுவதையும் பார்க்க முடிகிறது.

படுகொலை செய்யப்பட்ட பாலாஜி (30) என்ற இளைஞர் அருந்ததியர் கிருஷ்ணன் குடும்பத்தில் முதல் தலைமுறை பட்டதாரி கடந்த 24-5-2026 அன்று இரவு அவனியாபுரம் மதுரை மாநகராட்சி காலனி குடியிருப்பில் அமைந்துள்ள ஸ்ரீ வீர மாகாளியம்மன் (HRNC சார்பற்ற) திருக்கோவில். இக்கோவில் என்னவோ பொதுக் கோவில் என கூறிக்கொண்டாலும் ஒரு குறிப்பிட்ட சாதியின் ஆதிக்கத்தில் கட்டுப்பட்ட கோவில் என்பதாலே என்னவோ எக்குலம் வாழனும் முக்குலம் ஆளனும் போன்ற பேனர்கள் ஆங்காங்கே காணமுடிகிறது.

கோவில் முன்பாக திருவிழாவின் போது பெண்கள் கும்மியடித்துக் கொண்டிருந்த சமயத்தில் முக்குலம் பெருமை கொண்ட சமூகத்தைச் சேர்ந்த சிலர் கஞ்சா போதை அடித்துக் கொண்டு ரகளையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது சிலர் வாக்குவாதத்தில் ஈடுபட்ட இரு தரப்பினரையும் சத்தம் போட்டு சமரசம் செய்ய முற்பட்டிருக்கிறார் பாலாஜி.

சக்கிலியப் பயலெல்லாம் சமரசம் செய்யக் கூடிய அளவிற்கு பெரியாளா?

என மனதில் வைத்துக் கொண்டு நேற்று முந்தினம் (19-6-2026) மதியம் சுமார் 2.30 மணி அளவில் சுமார் ஆறு பேர் கொண்ட சாதிவெறி கூலிப்படை கும்பலால் சுற்றி வளைக்கப்பட்டு பாலாஜியை சரமாரி வெட்டி படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்.

இவருடன் ராசா உசேன் என்பவரையும் அக்கும்பல் வெட்டியுள்ளது.

**ஆளும் அரசு காரணமாக அமைந்துவிடக்கூடாது!**

இன்றைக்கு சாதி என்பது கோவில்களாலும் குலங்களாலும் சடங்குகளாலும் கூர்தீட்டப்படுவதற்கு ஆளும் அரசு காரணமாக அமைந்து விடக் கூடாது.

ஏனென்றால் மாநிலத்தில் தலைமையில் இருக்கக் கூடிய முதலமைச்சரே அரை நிர்வாணத்துடன் கோவிலுக்கு செல்வதை காண முடிகிறது.

தங்களை தூய்மை சக்தியாக கருதும் த.வெ.க. அரசு பட்டிலியன அருந்ததியர் படுகொலைக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட பொறுப்பு அமைச்சருமான சி.டி.நிர்மல் குமார் உடனடியாக பாதிக்கப்பட்ட பாலாஜிகுடும்பத்தை சந்தித்து உரிய பாதுகாப்பையும் நீதியையும் பெற்றுத் தர முன்வர வேண்டும்.

ஏனென்றால் கடந்த ஆட்சியில் நடந்த சாதிய படுகொலைகளுக்கு நியாயவான்கள் போல் பேசிய தவெக வினர் தங்கள் ஆட்சியில் நடந்த இந்த சாதிய படுகொலைக்கு தவெக வினர் எப்படி நடந்து கொள்கிறீர்கள் என்பதை உங்களின் பொது மனசாட்சிக்கு விட்டுவிடுகிறேன்.

இவ்வாறு ஆதித்தமிழர் பேரவைத் தலைவர் இரா. அதியமான் தெரிவித்துள்ளார்.

### சி.இ.மதிவாணன் தலைமை – எஸ்.முரளி முன்னிலை!

# 125வது வட்டம் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா - அறுசுவை உணவு!

## மாவட்டச் செயலாளர் மயிலை.த.வேலு வழங்குகிறார்!

சென்னை, ஜுன் 21-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி 125 வது வட்டம்சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு அறுசுவை உணவு வழங்கும் விழா 125 வது வட்ட கழக துணை செயலாளர் சி.இ.மதிவாணன் தலைமையில் இன்று (21.06.2026 - ஞாயிற்றுக்கிழமை) டாக்டர்.அம்பேத்கர் பாலம் மதியம் 12.00 மணியளவில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் தென் மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு உணவு வழங்குகிறார்.

மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி முன்னிலை வகிக்கிறார்.

அ.தவனேசன், அ.ரேவதி எம்.சி., வரவேற்கின்றனர்.

இதில் பகுதி கழக நிர்வாகிகள் எஸ்.முனுசாமி, பி.எல்.தாஸ், சீமன்சேகர், ஏ.குமாரி, எல்.உதயகுமார், வட்ட கழக செயலாளர்கள் வி.வெற்றிவேல், ஏ.தாஸ், மா.ப.அன்பு, பா.பொன்னுசாமி, துரை பார்த்திபன், கோ.கண்ணன். மாநில, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் மு.தம்பிதுரை.த.விக்னேஷ். ஆர்.ராமலிங்கம், ஜி.எம்.செல்வராஜ், ஊதுரைகண்ணு, க. தமிழ்ச் செல்வன். எம்.ஜி.மூர்த்தி, எம்.ஜெயராஜ், வி.மணி கண்டன், எம்.டி.சி.ராம லிங்கம், எஸ்.சிவராமன், ஆர்.ரவிச்சந்திரன். டி. மோகனவேலன், எஸ். நாகேந்திரன். இ.சத்திய மூர்த்தி, கே.ரவிசந்திரன், ஏ.ரமேஷ், அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பி.விநாயகம், டி.தீபன். எம்.ஜெய்கர், பி.ரஞ்சித், என்.நிர்மல்குமார், ஜி.எஸ். மாறன். எம்.செல்வம், ஆர்.அஜித், ஜி.செழியன். எம். மணிமாறன், இ.துரை, எஸ்.மணிகண்டன், ஏ.பி.வேளாங் கண்ணி, வி.விஜயகுமார், ஏ.சூர்யா கே.குமரேசன். ஜி.ஜனா, ஏ.ஆனந்த், இ. ஞானசேகர், எம்.தென்னரசு, ஏ.பி.சத்தியநாராயணன், இ.தர்மேந்திரன். டி.விசு. மாவட்ட பிரதிநிதி: எம்.ஜெயகோபி, எம்.திலீப்குமார், எம்.கிரிராஜன் மற்றும் கழகநிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

மயிலை சிழக்கு பகுதி பிரதிநிதி க.மணிகண்டன் நன்றி கூறுகிறார்.

### ஒன்றிய அரசின் மக்கள் விரோத - தமிழ்நாட்டிற்கு எதிரான நடவடிக்கைகளை கண்டித்து நடைபெறவுள்ள

# கண்டன ஆர்ப்பாட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட அணியினர் திரளாகப் பங்கேற்பீர்!

## இளைஞரணி – மாணவர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்! பி.கே.சேகர்பாபு ஆலோசனை!

சென்னை, ஜுன்.21-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞரணி - மாணவரணி மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட கழகச் செயலாளர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கினார்.



சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞரணி மாணவரணி மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் கூட்டம் நேற்று (20.6.2026 - சனிக்கிழமை) மாலை 6.00 மணி அளவில் சென்னை, ஸ்டாரன்ஸ் சாலை, எம்.கே.டி மகாலில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர் பாபு எம்.எல்.ஏ. கலந்து கொண்டு ஆர்ப்பாட்டம் எதற்காக நடைபெறுகிறது என்பதை விளக்கி உரையாற்றினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் நா. ரஞ்சித் விஜயாலயன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஜெ. பாலமுருகன் க.வினோத், பா ஜெகதீஷ், ஜி.ஜெ.பிரபு மாணவரணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஜோஸ்வா லிவிங்ஸ்டன், எஸ் எஸ் மணிகண்டன், கே வேணுகோபால், அசோக் ஆண்ட்ரூஸ், மதன் ரூபன், ஜெயலட்சுமி

பகுதி இளைஞரணி அமைப்பாளர்கள் பிரசாத், நிர்மல், சரண்ராஜ், பி செந்தில்குமார், கே. மோகன், த.ஜெயக்குமார் சே. பாலாஜி, ஜெ. மணிகண்டன், ஸ்ரீதர் ராஜன், மா. ஜெகதீஸ்வரன், மகேந்திரன், இரவை பிரபு, வசந்த், ஜேபிஆர்.ரகு பகுதி மாணவரணி அமைப்பாளர்கள் சாய் ஸ்ரீகாந்த், அழகேசன், மா. சிலம்பரசன், தமிழரசு, விஜயகுமார், வினோத், நிறைமொழி, ஆகாஷ், ஜானகிராமன், மணிகண்டன், சீனிவாசன் மற்றும் பகுதி துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானம் வருமாறு:-

**தீர்மானம் 1:**

மக்களுக்கான இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை ஒவ்வொரு நாளும் நிரூபித்துக் கொண்டிருக்கும் திராவிட மாடல் அரசர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர், இளம் தலைவர் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் மாணவரணி மற்றும் இளைஞர் அணி சார்பாக தமிழ்நாடு மாணவர்களின் கல்வி சார்ந்த பிரச்சனைகளுக்கு ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு அனுமதி வழங்கியதற்கு இக்கூட்டம் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றுகிறது.

**தீர்மானம் 2:**

தமிழ்நாட்டின் இருமொழிக் கொள்கைக்கு எதிராக, கல்வி மற்றும் நிர்வாகத் துறைகளில் இந்தியை மறைமுகமாக திணிக்க முயற்சிக்கும் ஒன்றிய அரசின் நடவடிக்கைகளை இக்கூட்டம் கடுமையாகக் கண்டிக்கிறது. தமிழ் மொழி மற்றும் மாநில மொழி உரிமைகளை பாதுகாக்க உறுதியேற்கிறது.

**தீர்மானம் 3:**

மாநிலங்களின் கல்வி உரிமைகளைப் பறித்து, சமூகநீதிக்கும் இடஒதுக்கீட்டுக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் புதிய கல்விக் கொள்கையை(பி.எம்.ஸ்ரீ மற்றும் வி.பி.எஸ்.ஏ) திணிக்க முயலும் ஒன்றிய அரசின் நடவடிக்கையை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

**தீர்மானம் 4:**

மாணவர்களின் சம வாய்ப்பை பறித்து, கிராமப்புற மற்றும் ஏழை மாணவர்களின் மருத்துவக் கல்விக் கனவை சிதைக்கும் நீட் தேர்வை நிரந்தரமாக ரத்து செய்து, மாநில அரசின் சேர்க்கை முறையை நடைமுறைப்படுத்த வேண்டும் என இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

**தீர்மானம் 5:**

தமிழகத்தில் மாற்று அரசியலை உருவாக்குவோம், மக்களின் குரலாக இருப்போம், பெண்களின் பாது காப்பை உறுதி செய்வோம் என்று பல்வேறு வாக்குறுதிகளை அளித்து அரசியல் களத்தில் வந்த தமிழக வெற்றி கழகம், இன்று தமிழக மக்களை பாதிக்கும் முக்கிய பிரச்சினைகளில் தொடர்ந்து மௌனம் காத்து வருவதும் குறிப்பாக பெண்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்கள், மாணவர்கள் எதிர்கொள்ளும் கல்விசார் பிரச்சினைகள், வேலைவாய்ப்பின்மை, சமூக நீதி தொடர்பான விவகாரங்கள் மற்றும் தமிழக உரிமைகள் சார்ந்த பல்வேறு பிரச்சினை களில் தெளிவான நிலைப் பாட்டை வெளிப்படுத்தாமல் இருப்பது அரசியல் பொறுப்பின்மையும், பெண்களின் பாது காப்பு குறித்த கேள்விகள் எழும் போது அமைதி காப்பதும், மக்களின் அன்றாட பிரச்சினைகளில் கருத்து தெரிவிக்கத் தயங்கிவருவதும் இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

**தீர்மானம் 6:**

திராவிட மாடல் அரசர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆட்சி காலத்தில் கொண்டு வரப்பட்ட திட்டங்களுக்கு ஸ்டிக்கர் ஒட்டி விளம்பரம் தேடிக் கொள்ளும் அரசாங்கமாக தான் தற்போதைய அரசு செயல்படுகிறது, குறிப்பாக பிங்க் பேட்ரோல் திட்டத்தை ஸ்டிக்கர் ஒட்டி சிங்கப்பெண் திட்டம் எனவும், மாணவர்களின் கனவு திட்டமான நான் முதல்வன் திட்டத்திற்கு பெயர் மாற்றி ஏதோ பெரிய சாதனை செய்தது போல இந்த விளம்பர அரசு தம்பட்டம் அடித்து வருவதை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

**தீர்மானம் 7:**

ஒன்றிய அரசின் மக்கள் விரோத மற்றும் தமிழ்நாட்டிற்கு எதிரான நடவடிக்கைகளைக் கண்டித்து 23.06.2026 அன்று நடைபெறவுள்ள கண்டன ஆர்ப்பாட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட இளைஞரணி மற்றும் மாணவரணி நிர்வாகிகளும் பெருந்திரளாக பங்கேற்று ஆர்ப்பாட்டத்தை மாபெரும் வெற்றியடையச் செய்வோம் என இக்கூட்டம் ஒருமனதாக உறுதியேற்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா! மாவட்டப் பிரதிநிதி ரா.ஆரோக்கியதாஸ் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# கொளத்தூர் மேற்கு பகுதியில் அறுசுவை உணவு: பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

## எ.நாகராசன் எம்.சி – சி.மகேஷ்குமார் – சரிதா மகேஷ்குமார் எம்.சி. பங்கேற்பு!

சென்னை, ஜுன். 21

சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் மேற்கு பகுதியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அறுசுவை உணவு வழங்கும் விழா இன்று (21.06.2026 ஞாயிற்றுக்கிழமை) பகல் 12 மணியளவில், பெரம்பூர், சோம ராமசாமி தெருவில் பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது.

மாவட்டப் பிரதிநிதி ரா.ஆரோக்கியதாஸ் நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் பகுதிக் கழகச் செயலாளர் எ.நாகராசன் எம்.சி, தலைமை செயற்குழு உறுப்பினர் சி.மகேஷ்குமார், தலைமை பொதுக்குழு உறுப்பினர், 6 வது மண்டலக் குழுத் தலைவர் சரிதா மகேஷ்குமார் எம்.சி, 69 (அ) வட்டக் கழகச் செயலாளர் பி.அதிபதி,

69 வது வட்டக் கழகச் செயலாளர் எம்.ஜெ.சி. பாபு, கொளத்தூர் மேற்கு பகுதி நிர்வாகிகள் இரா. தயாளன், எம்.சாக்ரடிஸ், வி.வெங்கடேசன், ஆர். காஞ்சனா, பி.சூரி, மாவட்டப் பிரதிநிதிகள் டி.ஏ.ராஜன், ஆர்.ஜெ. வெங்கடரமணமூர்த்தி,

69 (அ) வட்டக் கழக நிர்வாகிகள் ஆர்.ஸ்ரீகாந்த், பி.ஆனந்தன், எஸ்.செல்வம், கே.சரஸ்வதி, யூ. ரமேஷ் கதிரவன், டி.வாஞ்சிநாதன், ஏ.சரவணன், டி.கபிர்தாஸ், எஸ்.அந்தோணி, எஸ்.துக்காராம், எம்.மகேஸ்வரன், 69 வது வட்டக் கழக நிர்வாகிகள் பி.மனோகரன், சி. சந்தோஷ்குமார், டி.எ.மகாதேவன், சுகுணா மணிவேலன், டி.பத்மநாபன், பி. பசுபதி, கோ.ரமேஷ் பாபு, ப.அசோக்குமார், என்.சஞ்சீவி, மு.ர.ஜனா, இ.கே.கருணாகரன், ஜி. மோகன்ராஜ் மற்றும் அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

### தேனி மாவட்டக் கழக முன்னாள் செயலாளர்

# எல்.மூக்கையா புதல்வர் எல்.எம். மருதுபாண்டியன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

தேனி, ஜுன் 21-

திராவிட முன்னேற்றக் கழக தேனி முன்னாள் மாவட்ட செயலாளர் எல். மூக்கையா, அவர்களது மகனும், எல்.எம். பாண்டியன், வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் எல்.எம். சின்னபாண்டியன் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் எல்.எம். செல்வகுமார் (துறைமுகம்) அவர்களது தம்பியும், கோவை மாவட்ட வழக்கறிஞர் சங்கத் தலைவருமான எல். எம். மருது பாண்டியன்



அவர்கள் நேற்று (20.06.2026) இரவு 8.20 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் இன்று (21.06.2026) மதியம் 2 மணி அளவில் எ.புதுப்பட்டியில் உள்ள அவர்களது இல்லத்தில் இருந்து நடைபெறும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல் அறிந்ததும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

# ஜுன் 23 : ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கை - பல்கலைக்கழகங்களின் அதிகாரப் பறிப்பு!

# கழகத் தலைவரின் அறிவுறுத்தலில் - மாணவர் அணி சார்பில் ஆளுநர் மாளிகை முன்பு கண்டன ஆர்ப்பாட்டம்!